*DEPOSITION OF WITNESS*
*(Chapter XXIII Code of Criminal Procedure)*
- - - - -

# *IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| *Case No.* | : | *SC No. 502 / 2017* |
| *Deposition of witness for* | : | *PW : 8* |
| *Name* | : | திருமதி.கல்பனா |
| *Father's Husband's Name* | : | |
| *Village* | : | |
| *Taluk* | : | |
| *Caste* | : | |
| *Calling* | : | |
| *Religion* | : | |
| *Age* | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* **27.06.2025**

எதிரி-*6* ஆஜர். எதிரி-*1* ஆஜரில்லை. பிரிவு *317* குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் உத்தரவுப்படி மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருமணமாகி என் கணவர் வீட்டாரோடு புதுக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். திருமணத்திற்கு முன்னர் நான் முடக்காத்தான் என்ற ஊரில் உள்ள SS மருத்துவமனையில் நர்சாக வேலை பார்த்து வந்தேன். ஆஜர் 6 வது எதிரியைத் தெரியும். நீதிமன்றத்தில் ஆஜராகாத 5 வது எதிரியைத் தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் மட்டும் அதசாஆ.6 ஆகும்.** அந்த கையெழுத்தை என்னைக் காவல் நிலையம் கூட்டிப் போய் வாங்கினார்கள். வேறு எந்த விபரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**<u>அரசு தரப்பில் கு.வி.</u>**

போலிசார் விசாரணையின் போது, கடந்த 21.06.2016 ம் தேதி இரவு 10.00 மணிக்கு, கூடல்புதூர் காவல் ஆய்வாளர் அவர்கள், SS மருத்துவமனைக்கு வந்து, என் முன்னிலையிலும், என்னோடு நர்சாக பணிபுரிந்த லெட்சுமி என்பவர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதில் நானும் லெட்சுமியும் சாட்சியாக இருந்து, அதன் விபரம் அறிந்து கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. 5,6 எதிரிகள் நான் வேலை பார்த்த மருத்துவமனையின் உரிமையாளர்கள் என்றும் அதனால் அவர்களை இந்த வழக்கில் இருந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

*DEPOSITION OF WITNESS*
*(Chapter XXIII Code of Criminal Procedure)*
- - - - -

## *IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| *Case No.* | : | *SC No. 502 / 2017* |
| *Deposition of witness for* | : | *PW : 9* |
| *Name* | : | திருமதி.லெட்சுமி |
| *Father's Husband's Name* | : | |
| *Village* | : | |
| *Taluk* | : | |
| *Caste* | : | |
| *Calling* | : | |
| *Religion* | : | |
| *Age* | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* ***27.06.2025***

எதிரி-*6* ஆஜர். எதிரி-*1* ஆஜரில்லை. பிரிவு *317* குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் உத்தரவுப்படி மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருமங்கலத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் நர்சாக வேலை செய்கிறேன். இதற்கு முன்னர் நான் முடக்காத்தான் என்ற ஊரில் உள்ள SS மருத்துவமனையில் நர்சாக வேலை பார்த்து வந்தேன். ஆஜர் 6 வது எதிரியைத் தெரியும். நீதிமன்றத்தில் ஆஜராகாத 5 வது எதிரியைத் தெரியும். அசா8 என்னுடன் நர்சாக பணிபுரிந்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் மட்டும் அதசாஆ.7 ஆகும்.** அந்த கையெழுத்தை என்னைக் காவல் நிலையம் கூட்டிப் போய் வாங்கினார்கள். வேறு எந்த விபரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**<u>அரசு தரப்பில் கு.வி.</u>**

போலிசார் விசாரணையின் போது, கடந்த 21.06.2016 ம் தேதி இரவு 10.00 மணிக்கு, கூடல்புதூர் காவல் ஆய்வாளர் அவர்கள், SS மருத்துவமனைக்கு வந்து, என் முன்னிலையிலும், என்னோடு நர்சாக பணிபுரிந்த அசா8 கல்பனா என்பவர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதில் நானும் அசா8 ம் சாட்சியாக இருந்து, அதன் விபரம் அறிந்து கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. 5,6 எதிரிகள் நான் வேலை பார்த்த மருத்துவமனையின் உரிமையாளர்கள் என்றும் அதனால் அவர்களை இந்த வழக்கில் இருந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

***DEPOSITION OF WITNESS***
*(Chapter XXIII Code of Criminal Procedure)*
- - - - -

## *IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| ***Case No.*** | : | ***SC No. 502 / 2017*** |
| ***Deposition of witness for*** | : | ***PW : 10*** |
| ***Name*** | : | **திருமதி.லோகேஷ்வரி** |
| ***Father's Husband's Name*** | : | |
| ***Village*** | : | |
| ***Taluk*** | : | |
| ***Caste*** | : | |
| ***Calling*** | : | |
| ***Religion*** | : | |
| ***Age*** | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* ***27.06.2025***

எதிரி-6 ஆஜர். எதிரி-1 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் உத்தரவுப்படி மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

நான் Diploma நர்சிங் படிப்பு முடித்துள்ளேன். கடந்த 2016 ம் ஆண்டு முன்னர் நான் முடக்காத்தான் என்ற ஊரில் உள்ள SS மருத்துவமனையில் நர்சாக வேலை பார்த்து வந்தேன். 5,6 எதிரிகளைத் தெரியும். அவர்கள் நான் வேலை பார்த்த மருத்துவமனையின் உரிமையாளர்கள் ஆவார்கள். மேற்படி மருத்துவமனையில், பொதுவாக வெளி நோயாளிகள் வந்தால் அவர்களை பதிவு செய்து, மருத்துவரிடம் அனுப்புவது மட்டும் தான் எனது வேலை. எங்கள் மருத்துவமனையில் ஆர்த்தி என்ற பெண்ணிற்கு குழந்தை பிறந்து, சிகிச்சை முடிந்து குழந்தையுடன் அவர் discharge ஆகி சென்றுவிட்டார். அதன் பிறகு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**<u>அரசு தரப்பில் கு.வி.</u>**

போலிசார் விசாரணையின் போது, கடந்த 09.06.2016 ம் தேதி நான் இரவு நேர Duty ல் இருந்த போது, ஆர்த்தி என்ற கர்ப்பிணி பெண், அவரது தாயாருடன் SS மருத்துவமனைக்கு வந்ததாகவும், அவரை விசாரித்த போது அவர் எதுவும் கூறவில்லை என்றும் அவரது அம்மா மட்டும் தான் பேசினார் என்றும் அவர் Doctor இடம் பேசிவிட்டதாகவும், Doctor ஐ மட்டும் பார்க்க வந்ததாக கூறியதாகவும், ஆர்த்தியை மருத்துவமனையில் Admit போட்டார்கள் என்றும் ஆர்த்தி பற்றிய தகவல்களை எந்த நோட்டிலும் பதிய வேண்டாம் என்று டாக்டர்.சாந்தி சொன்னதாகவும் அதனால் நாங்கள் பதிவேட்டில் பதியவில்லை என்றும் 10.06.2016 ம் தேதி ஆர்த்திக்கு ஆண் குழந்தை பிறந்தது என்றும் 12.06.2016 ம் தேதி Discharge ஆகி போகும் போது குழந்தையை எடுத்துப் போகவில்லை என்றும் அவர் discharge ஆகி போன விபரத்தை தனியாக ஒரு தாளில் எழுதி டாக்டர் சாந்தி வைத்துக் கொண்டார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 5,6 எதிரிகள் நான் வேலை பார்த்த மருத்துவமனையின் உரிமையாளர்கள் என்றும் அதனால் அவர்களை இந்த வழக்கில் இருந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை